Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்புப் பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வியாழன், மார்ச் 06, 2025 | இதழ் 327

# அமெரிக்காவின் பொற்காலம் துவங்கியது. ஏப்ரல் 2 முதல் இந்தியா, சீன பொருட்களுக்கு அதிக வரி: அதிபர் டிரம்ப் அறிவிப்பு

சென்னை, 06 மார்ச் 2025: ஏப்ரல் 2ம் தேதி முதல் சீனா, பிரேசில், இந்தியா உள்ளிட்ட நாடுகளின் பொருட்கள் மீது அமெரிக்கா பரஸ்பர வரிகளை விதிக்கும் என அதிபர் டிரம்ப் அறிவித்துள்ளார்.

அமெரிக்க பார்லிமெண்டில், எதிர்க்கட்சி அமளிக்கு இடையே, கூட்டுக்குழு கூட்டத்தில் அதிபர் டிரம்ப் பேசியதாவது:

அமெரிக்காவின் பொற்காலம் துவங்கிவிட்டது. அமெரிக்கர்களின் கனவை நனவாக்க உழைத்து வருகிறோம்.

அமெரிக்காவின் உத்வேகம், பெருமை, நம்பிக்கை மற்றும் உற்சாகம் திரும்பி உள்ளது. ஜனவரி 20ம் தேதி பதவி ஏற்றதிலிருந்து வெறும் ஆறு வாரங்களுக்குள் கிட்டத்தட்ட 100 நிர்வாக உத்தரவுகளில் கையெழுத்திட்டு உள்ளேன். 400 நிர்வாக நடவடிக்கைகளை நிறைவேற்றி உள்ளேன்.

கடந்த நான்கு ஆண்டுகளில் மற்றவர்கள் செய்ததை விட 43 நாட்களில் நாம் அதிகமாக சாதித்துள்ளோம். ஏப்ரல் 2ம் தேதி இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகளின் பொருட்கள் மீது அமெரிக்கா பரஸ்பர வரிகளை விதிக்கும்.

அமெரிக்கா மீது மற்ற நாடுகள் விதிக்கும் எந்த வொரு வரிகளுக்கும் அமெரிக்கா சமமான நடவடிக்கைகளுடன் பதிலடி கொடுக்கும். வரிகள் அமெரிக்காவை மீண்டும் மீண்டும் பணக்காரர்களாகவும், சிறந்தவர்களாகவும் மாற்றும்.

ஐரோப்பிய நாடுகள், சீனா, பிரேசில், இந்தியா மற்றும் பிற நாடுகள் நாம் வசூலிப்பதை விட கணிசமாக அதிக வரிகளை வசூலிக்கின்றன. இது மிகவும் நியாயமற்றது. இந்தியா நம்மிடம் 100 சதவீத வரிகளை வசூலிக்கிறது. மற்ற நாடுகள் நமக்கு என்ன வரி விதித்தாலும், நாம் அவற்றுக்கு வரி விதிப்போம்.

ஆண் மற்றும் பெண் என இரண்டு பாலினங்கள் மட்டுமே உள்ளன என்பதை அமெரிக்க அரசாங்கத்தின் அதிகாரப்பூர்வ கொள்கையாக மாற்றும் உத்தரவில் நான் கையெழுத்திட்டேன். 48 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மோசமான பணவீக்கத்தை நாங்கள் சந்தித்தோம்.

இவ்வாறு டிரம்ப் பேசினார்.

சீனா கடும் எதிர்ப்பு - அமெரிக்காவின் இந்த முடிவுக்கு மெக்சிகோ, கனடா, சீனா கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, அமெரிக்காவிலிருந்து இறக்குமதியாகும் 30 பில்லியன் கனடியன் டாலர் மதிப்பிலான பொருட்களுக்கு 25 சதவீதம் வரி விதிக்கப்படுவதாகவும், இது செவ்வாய்க்கிழமையிலிருந்து அமலுக்கு வருவதாகவும் தெரிவித்துள்ளார். சீனாவின் நிதி அமைச்சகமும், அமெரிக்காவிலிருந்து இறக்குமதியாகும் சோயாபீன்ஸ், மக்காச்சோளம், மாட்டிறைச்சி உள்ளிட்ட வேளாண் பொருட்களுக்கு 10-15 சதவீதம் கூடுதல் வரி விதிக்கப்படும் என்று தெரிவித்துள்ளது.

மெக்சிகோ அதிபர் கிளவுடியா ஷீன்பாம், அமெரிக்கா எங்கள் மீது வரி விதித்தால் அதற்கு பதிலடி தரும் விதமாக தாங்களும் கைவசம் திட்டங்களை தயாராக வைத்திருப்பதாக தெரிவித்துள்ளார்.

# அமெரிக்காவுடனான வர்த்தகப் போர் தொடரும்: கனடா பிரதமர் திட்டவட்டம்

சென்னை 06, மார்ச் 2025 : அமெரிக்காவுடனான வர்த்தக போரில் இருந்து பின் வாங்க போவதில்லை என்று கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கூறியுள்ளார்.

அமெரிக்க அதிபராக ஜனவரி 20ந்தேதி பதவியேற்ற டொனால்டு டிரம்ப் பல அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். தன் அண்டை நாடுகளான கனடா மற்றும் மெக்சிகோவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 25 சதவீத வரி விதிக்கும் உத்தரவை அதிபர் டிரம்ப் பிறப்பித்திருந்தார்.

இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில், அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 25 சதவீத வரி விதிப்பதாக, கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அறிவித்தார். அமெரிக்கப் பொருட்களுக்கு பதிலடி வரி விதிக்கப்படும் என கனடா அறிவித்ததைத் தொடர்ந்து அந்நாட்டு பொருட்களுக்கு மேலும் இறக்குமதி வரி விதிக்கப் போவதாக அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் எச்சரித்துள்ளார்.

பின் வாங்க போவதில்லை - இந்த நிலையில், கனடாவில் இருந்து இறக்குமதி செய்யப் படும் பொருட்களுக்கு கடுமையான வரி விதிக்கும் அமெரிக்காவை எதிர்த்து போட்டியிடப் போவதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார். கனடா மீதான வரி விதிப்பு நடவடிக்கையை "வர்த்தக போர்" என்று குறிப்பிட்டுள்ள ட்ரூடோ, இதன் மூலம் அமெரிக்க குடும்பங்கள் கடுமையாக பாதிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுடனான வர்த்தக போரில் இருந்து பின் வாங்க போவதில்லை. கனடியர்கள் நியாயம் மற்றும் கண்ணியம் மிக்கவர்கள். சொந்த நாட்டின் நல்லிணக்கம் ஆபத்தில் இருக்கும் போது சண்டையில் இருந்து பின்வாங்க மாட்டோம் என்று கூறியுள்ளார்.

# கால்நடை சுகாதாரம் மற்றும் நோய் கட்டுப்பாட்டுத் திட்டத்தை திருத்தியமைக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல்

சென்னை 06, மார்ச் 2025 : பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் இன்று நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில், கால்நடை சுகாதாரம் மற்றும் நோய் கட்டுப்பாட்டுத் திட்டத்தைத் திருத்தியமைப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

இந்தத் திட்டம் தேசிய கால்நடை, நோய் கட்டுப்பாடு, பசு மருந்தகங்கள் என மூன்று கூறுகளைக் கொண்டது. தீவிர கால்நடை நோய் கட்டுப்பாட்டுத் திட்டம், தற்போதுள்ள கால்நடை மருத்துவமனைகள், மருந்தகங்களை நிறுவுவதற்கும் அவற்றின் செயல்பாடுகளை வலுப்படுத்துவதற்கும் உதவிடும். நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவு, விலங்குகளுக்கான நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கு மாநில அரசுகளுக்கு உதவி செய்வது போன்ற துணைக் கூறுகளையும் கொண்டுள்ளது. பசு மருந்தகங்கள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்ட புதிய அம்சமாகும். இத்திட்டங்களுக்காக 2024-25, 2025-26 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கான மொத்த செலவு 3,880 கோடி ரூபாயாகும். இதில், நல்ல தரமான, குறைந்த விலையில் பொதுவான மருந்துகளை வழங்குவதற்காக 75 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு, பசு மருந்தகத்தின் கீழ் மருந்துகளின் விற்பனைக்கான ஊக்கத்தொகை ஆகியவை அடங்கும்.

கோமாரி நோய், கன்று வீச்சு நோய், மூளை தண்டுவட திரவம், தோல் கட்டி நோய் போன்ற நோய்களால் கால்நடைகளின் உற்பத்தித்திறன் கடுமையாகப் பாதிக்கப்படுகிறது. இது போன்ற நோய்களைக் கட்டுப்படுத்தவும் தடுக்கவும் உதவும் வகையில் சுத்திகரிப்பு திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம் கால்நடைகளின் இழப்புகளைக் குறைக்க இயலும். நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகளின் துணைக் கூறுகள் மூலம் கால்நடை சுகாதார சேவையை வீடுகளுக்கே நேரடியாகச் சென்று வழங்குவதற்கும், பிரதமரின் வேளாண் நலமையங்கள் மற்றும் கூட்டுறவு சங்கங்கள் வாயிலாக பொதுவான கால்நடை மருந்துகளை பசு மருந்தகங்கள் மூலம் கிடைக்கச் செய்யவும் இத்திட்டம் வகை செய்கிறது.

தடுப்பூசி, தொடர் கண்காணிப்பு, சுகாதார வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் கால்நடை நோய்களைத் தடுக்கவும், கட்டுப்படுத்தவும் இத்திட்டம் உதவுகிறது. மேலும், இத்திட்டம் உற்பத்தித் திறனை மேம்படுத்தி, வேலைவாய்ப்பை உருவாக்குவதுடன் கிராமப்புறங்களில் தொழில்முனைவோரை ஊக்குவித்து, விவசாயிகளின் பொருளாதார இழப்புகளைத் தடுக்க உதவுகிறது.

# பிரதமர் மார்ச் 6 அன்று உத்தராகண்ட் பயணம்

சென்னை 06, மார்ச் 2025 : பிரதமர் திரு. நரேந்திர மோடி மார்ச் 6 அன்று ஞுத்தராகண்ட்டில் பயணம் மேற்கொள்கிறார். காலை 9:30 மணியளவில், அவர் முக்வாவில் உள்ள கங்காதேவியின் கோவிலில் நடைபெறும் ஆராதனை நிகழ்ச்சியில் பங்கேற்று வழிபடுகிறார். காலை 10:40 மணியளவில், அவர் மலையேற்றம் மற்றும் இரு சக்கர வாகனப் பேரணியை கொடியசைத்து தொடங்கி வைக்கிறார். மேலும் ஹர்சிலில் நடைபெறும் பொது நிகழ்ச்சியில் அவர் உரையாற்ற உள்ளார். உத்தராகண்ட் அரசு இந்த ஆண்டு குளிர் காலச் சுற்றுலா திட்டத்தைத் தொடங்கியுள்ளது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஏற்கனவே கங்கோத்ரி, யமுனோத்ரி, கேதார் நாத், பத்ரிநாத் ஆகிய பகுதிகளுக்குச் சென்றுள்ளனர். இந்தத் திட்டம் ஆன்மீகச் சுற்று லாவை மேம்படுத்து வதையும் உள்ளூர்ப் பொருளாதாரம், தங்குமிடங்கள், சுற்றுலா வணிகங்கள் போன்ற வற்றை மேம்படுத்து வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

# தேஜஸ், வந்தே பாரத் ரெயில்களின் சமஸ்கிருதப் பெயர்களை தமிழில் மாற்றுங்கள்: மு.க.ஸ்டாலின்

சென்னை 06, மார்ச் 2025 : பிரதமர் மோடிக்கு தமிழ் மீது பற்று இருப்பதாக பாஜக கூறுவது உண்மையெனில், ரெயில்களின் சமஸ்கிருத பெயர்களை தமிழில் மாற்ற வேண்டும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

மும்மொழிக் கல்விக் கொள்கையை ஏற்றுக் கொள்ளாததால், தமிழகத்துக்கான கல்வி நிதியை விடுவிக்க மத்திய அரசு மறுப்பு தெரிவித்துள்ளது. மத்திய அரசின் இந்த நடவடிக்கைக்கு தமிழக அரசியல் கட்சிகள் கடும் கண்டனங்களை தெரிவித்து வருகின்றனர். இதனிடையே, மும்மொழிக் கொள்கையால் தாய்மொழிக்கு எந்த பாதிப்பும் இல்லை என்றும் பிரதமர் மோடிக்கு தமிழ் மீது மிகுந்த அக்கறை இருப்பதாகவும் பாஜக தலைவர்கள் தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில் இன்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது: பிரதமருக்கு தமிழ் மீது மிகுந்த பற்று இருப்பதாக பாஜக கூறுவது உண்மையெனில், அது ஏன் ஒருபோதும் அவரது செயல்பாட்டில் பிரதிபலிக்கவில்லை? நாடாளுமன்றத்தில் செங்கோலை நிறுவுவதற்குப் பதிலாக தமிழகத்தில் உள்ள மத்திய அரசு அலுவலகங்களில் இந்தியை நீக்கவும். வெற்றுப் பாராட்டுக்கு பதிலாக, சமஸ்கிருதம் போன்ற இறந்த மொழியை விட தமிழகத்துக்கு அதிக நிதி ஒதுக்கவும். இந்திக்கு இணையான அலுவல் மொழியாக தமிழை மாற்றவும். திருவள்ளுவரை காவிமயமாக்கும் தீவிர முயற்சிகளை நிறுத்தி, காலத்தால் அழியாத அவரது திருக்குறளை இந்தியாவின் தேசிய நூலாக அறிவிக்கவும், மத்திய பட்ஜெட்டின் போது குறள்களை மேற்கோள் காட்டுவதுடன் நின்றுவிடாமல், சிறப்பு திட்டங்கள், பேரிடர் நிவாரண நிதி, புதிய ரயில்வே திட்டங்களை உறுதி செய்ய வேண்டும்.

தமிழகத்தில் இயங்கும் அந்த்யோதயா, தேஜஸ்ம், வந்தே பாரத் போன்ற ரெயில்களுக்கு சமஸ்கிருதப் பெயர்களை திணிப்பதை நிறுத்துங்கள். யூமிழ் நாட்டின் ரெயில்களில் செம்மொழி, முத்துநகர், வைகை, மலைக் கோட்டை, திருக்குறள் போன்ற தமிழ் பெயர் வைக்கும் நடைமுறைக்கு திரும்பவும். தமிழ் மீதான பற்றை செயல் மூலம் நிரூபிக்க வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார்.

# அரசு மின்னணு சந்தையின் தலைமை நிர்வாக அதிகாரியாக திரு அஜய் பாதூ நியமிக்கப்பட்டுள்ளார்

சென்னை 06, மார்ச் 2025 : வர்த்தகத் துறை கூடுதல் செயலாளரான திரு அஜய் பாதூவை, அரசு மின்னணு சந்தையின் தலைமை நிர்வாக அதிகாரியாக 2025 மார்ச் 3 அன்று மத்திய அரசு நியமித்துள்ளது. வர்த்தகத் துறையில் அவர் வகிக்கும் பொறுப்புகளுடன் கூடுதலாக இந்தப் பொறுப்பையும் அவர் கவனிப்பார்.

அரசு கொள்முதல் செய்வதற்கான நாட்டின் மிகப்பெரிய மின்னணு சந்தையான ஜிஇஎம் (ஜெம்)-ன் தலைமை நிர்வாக அதிகாரியாக அவர் நியமிக்கப்பட்டுள்ளார். டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் நிறுவனத்தால் இயக்கப்படும் அடுத்த தலைமுறை டிஜிட்டல் சந்தைக்கு தளம் மாறும்போது அவர் இப்பொறுப்புக்கு நியமிக்கப்பட்டுள்ளார். தற்போது, அரசு மின்னணு சந்தையின் மொத்த வணிக மதிப்பு ரூ.4.58 லட்சம் கோடியாகும். இது ஆண்டுக்கு ஆண்டு என்ற அடிப்படையில் 28.65% ஆண்டு வளர்ச்சியை பிரதிபலிக்கிறது.

குஜராத்தின் 1999 பிரிவைச் சேர்ந்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரியான திரு பாதூ, நகர்ப்புற உள்கட்டமைப்பு மேம்பாடு உட்பட பல்வேறு துறைகளில் கொள்கை வகுத்தல் மற்றும் செயல்படுத்துவதில் 20 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

2024 ஆகஸ்ட் மாதத்தில், திரு பாதூ வர்த்தகத் துறையில் கூடுதல் செயலாளராக நியமிக்கப்பட்டார். முன்னதாக, அவர் இந்தியத் தேர்தல் ஆணையத்தில் துணைத் தேர்தல் ஆணையராகப் பணியாற்றினார். முன்னாள் குடியரசுத் தலைவர் திரு ராம் நாத் கோவிந்தின் இணைச் செயலாளராகவும், குஜராத் கடல்சார் வாரியத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாகவும் மற்றும் ராஜ்கோட், வதோதரா நகராட்சி ஆணையர் போன்ற தலைமைப் பதவிகளையும் அவர் வகித்துள்ளார்.

# மின்னணு இசையமைப்பாளர்கள் மற்றும் டிஸ்க் ஜாக்கிகள் கவனத்திற்கு : வேவ்ஸ் 2025 இசைப் போட்டியில் பங்கேற்பதற்கான கடைசி வாய்ப்பு

சென்னை 06, மார்ச் 2025 : உலக ஒலி மற்றும் ஒளி, பொழுதுபோக்கு உச்சி மாநாடு 2025, ஆர்வமுள்ள டி.ஜே.க்கள், தயாரிப்பாளர்கள் மற்றும் மின்னணு இசைக் கலைஞர்களுக்கு தங்கள் திறமைகளை வெளிப்படுத்த ஒரு தளத்தை வழங்குகிறது. நீங்கள் ஒரு மின்னணு இசையை உருவாக்குபவராக இருந்தால், டி.ஜே.வாக ஆர்வம் இருந்தால், உங்கள் திறமைகளை வெளிப்படுத்தக்கூடிய இறுதி வாய்ப்பாகஉலக ஒலி மற்றும் ஒளி பொழுது போக்கு உச்சி மாநாடு 2025 இருக்கிறது. மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம், இந்திய இசைத் துறையுடன் இணைந்து இந்த சவால் போட்டிக்கு ஏற்பாடுகளை செய்துள்ளது. இது ஒலி, ஒளி மற்றும் பொழுது போக்கு உலகில் உங்கள் படைப்பு திறமைகளையும் புதுமைகளையும் வெளிப்படுத்த ஒரு அற்புதமான வாய்ப்பை வழங்குகிறது.

மின்னணு இசை மற்றும் நடனத்தை உருவாக்கி தயாரிப்பதில் முன் அனுபவமுள்ள எந்தவொரு நாட்டைச் சேர்ந்த இசையமைப்பாளர்கள் மற்றும் இசைக் கலைஞர்களும் இந்த சவால் போட்டியில் கலந்து கொள்ளலாம். 2025 மே 1 முதல் 4 வரை மும்பையில் நடைபெறும் இந்த சவாலின் இறுதிப் போட்டியில் பங்கேற்கும் முதல் பத்து பேர் இசைத் துறையின் அனைத்து கலைஞர்களின் முன்னிலையில் நிகழ்ச்சி நடத்தும் வாய்ப்பை இது வழங்குகிறது.

கூடுதல் விவரங்களுக்கு wavesatinfo @indianmi.org மூலம் தொடர்புக் கொள்ளலாம்.

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி
வியாழன்,
மார்ச் 06, 2025

# சாம்சங் ஆனது ஸ்மார்ட்போன் சர்வீஸ் மையங்களை ப்ரீமியம் டிசைன் மற்றும் பிரத்தியேக வாடிக்கையாளர் சேவை மூலம் உருமாற்றம் செய்கிறது

மதுரை 06, மார்ச் 2025: இந்தியாவின் மிகப்பெரிய கன்ஸ்யூமர் எலெக்ட்ரானிக்ஸ் பிரான்டான சாம்சங் ஆனது தனது ஸ்மார்ட்போன் வாடிக்கையாளர் சேவை அனுபவத்தை தனது சர்வீஸ் மையங்களை பரந்தளவில் ரீடிசைன் செய்து மேம்படுத்த விருக்கிறது. இந்த முன்னெடுப்பானது வில்லங்கமற்ற சேவை-டு-விற்பனை பயணத்தை ஸ்தாபிதம் செய்து ப்ரீமியம் வாடிக்கையாளர் சேவையின் மீதான இலக்குடன் கூடிய சாம்சங்கின் ஈடற்ற விற்பனைக்கு பிந்தைய (ஆஃப்டர்-சேல்ஸ்) ஆதரவிற்கான அர்பணிப்பை வலுப்படுத்துகிறது.




ஒருங்கிணைந்த பன்முக (ஆம்னி-சானல்) அனுபவத்தை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்ட இந்த ரீமாடல் செய்யப்பட்ட சேவை மையங்கள் ஆனவை மேம்பட்ட டிஜிட்டல் மயமாக்கப்பட்ட வழிமுறைகளை நிறுவி சாம்சங்கின் இளம் மற்றும் வலுவான வாடிக்கையாளர் அடித்தளத்தின் பரிணாம வளர்ச்சியடையும் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்வதற்கு இலக்கு கொள்கின்றன. இவை பரந்த ப்ராடக்ட் பட்டியலை காட்சிப்படுத்துவது மட்டுமல்லாது தொழில்நுட்ப ஆக்கப்புத்தாக்கத்தில் மேம்பட்ட சிக்கல் கண்டறியும் கருவிகளின் உதவியுடன் மிக துல்லியமான முறையில் பிரச்சினைகளை கண்டறிவதில் முன்னனி வகிப்பவை.

இந்த மேம்பட்ட மையங்கள் பாரம்பரிய லேயவுட்டுகளிலிருந்து விதிவிலக்காகி ஒரு லவுஞ்-போன்ற சுற்றுப்புறத்தை உருவாக்க இன்பில்ட் ஒயர்லெஸ் சார்ஜிங் முனைகள் பொருத்தப்பட்ட மிக நவீன, சோஃபா பாணி இருக்கைகளை கொண்டவை. புதிய கோணத்தில் கற்பனை செய்யப்பட்ட ஆக்சசரி சுவர்கள் ஆனவை

சாம்சங்கின் மிகப்பரந்தளவு வேரபிள்களை (அணிபவற்றை) காட்சிப்படுத்தும் மற்றும் மிக பிரமாண்ட டிஜிட்டல் ஸ்க்ரீன்கள் ஆனவை வாடிக்கையாளர்களுக்கு ஆழ்ந்தமிழ்ந்து போக செய்கின்ற அனுபவத்தை வழங்கும் வகையில் மிக நவீன ப்ராடக்ட் ஆக்கப்புத்தாக்கங்களை காட்சிப்படுத்தும்.

“கடந்த ஒருசில தசாப்தங்களில் நாங்கள் எங்கள் நடப்பு வாடிக்கையாளர்களின் அடித்தளத்தை ஆதரிப்பதற்கு சர்வீஸ் சென்டர்களின் ஒரு வலுவான நெட்வொர்க்கை விரிவுபடுத்தியுள்ளோம் மற்றும் இது எங்கள் விற்பனை கூட்டாளர்களின் தேவைகளுடன் இணங்குகிறது. அனுதினமும் வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகள் மாறி வருவதால் இந்த இடவமைப்புகளை பாரம்பரிய வாடிக்கையாளர் தேவைகளை மனதில் இருத்தியவாறு மேலும் கவர்ச்சிகரமாக விளங்க செய்ய இளமை ததும்புகின்ற மற்றும் திறனுறு வடிவாக்க கூறுகளை உட்புகுத்தி உருமாற்ற விரும்பினோம். இதன் மையத்தில் இருப்பது என்னவென்றால் எமது வாடிக்கையாளர்களுக்கு ஒரு அதியற்புத அனுபவத்தை வழங்கும் சாம்சங்கின் உறுதிப்பாடாகும்,” என்று சாம்சங் இந்தியாவின் வாடிக்கையாளர் மனநிறைவு பிரிவின் வி. பி. சுனில் க்யூட்டின்ஹா விளக்கினார்.

வாடிக்கையாளர் சந்திப்புகளை மேம்படுத்த பிரத்தியேக கியாஸ்குகள் ஆனவை ப்ராடக்ட் சப்போர்ட் நிபுணர்களை வருகையாளர்கள் தொடர்பு கொள்ளவும், புதிய ப்ராடக்ட் அறிமுகங்களை ஆராய்ந்து பார்க்கவும் சிறப்பு சலுகைகள் மற்றும் தள்ளுபடிகளை பற்றி அறிந்துக் கொள்ளவும் உதவும். ஒரு ஆன்லைன் முன்பதிவு அமைப்பானது வாடிக்கையாளர்கள் தங்கள் வருகைகளை முன்கூட்டியே திட்டமிட அனுமதித்து குறைந்தபட்ச காத்திருப்பு நேரத்துடன் சிக்கலற்ற அனுபவத்தை உறுதிபடுத்தும்.

சாம்சங் ஆனது இந்தியா முழுதும் அமைந்துள்ள சர்வீஸ் மையங்கள், உள்ளுறை பொறியிலாளர்கள் மற்றும் வசூல் முனைகள் உள்ளிட்ட 3,000 க்கும் அதிகமான சர்வீஸ் டச்பாயின்டுகளை இயக்கி வருகிறது. சர்வீஸ் சென்டரின் ரீடிசைன் அறிமுகமானது முக்கிய நகரங்கள் முழுவதும் படிநிலைகளில் செயல்படுத்தப்பட்டு நாடு முழுதும் மேம்பட்ட வாடிக்கையாளர் அனுபவத்தை உறுதிபடுத்தும்.

# டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் அனைத்து புதிய மேனுவல் டிரான்ஸ்-மிஷன் (எம்டி) தரத்தில் லெஜெண்டர் 4எக்ஸ்4 ஐ அறிமுகப்படுத்துகிறது

சென்னை, 06 மார்ச் 2025: உயர் செயல்திறன், சாகச மற்றும் ஸ்டைலான எஸ்யூவி களுக்கான வளர்ந்து வரும் தேவையை நிவர்த்தி செய்யும் வகையில், டொயோட்டோ கிர்லோஸ்கர் மோட்டார் (திகேஎம்) இன்று டொயோட்டோ லெஜெண்டர் 4எக்ஸ்4 இன் மேனுவல் டிரான்ஸ்மிஷன் (எம்டி) மாறுபாட்டை அறிமுகப்படுத்தியது.



சிலிர்ப்பைத் தேடும் ஓட்டுநர் ஆர்வலர்களுக்காக வடிவமைக்கப்பட்ட இந்த புதிய மாறுபாடு சக்தி, ஆடம்பரம் மற்றும் அதிநவீன தொழில்நுட்பத்தின் சரியான கலவையை வழங்கும் போது ஈடுபாடு மற்றும் கட்டுப்பாட்டை மேம்படுத்துகிறது.

லெஜெண்டர் 4எக்ஸ்4 எம்டியின் அறிமுகம் குறித்து பேசிய விற்பனை-சேவை-பயன்படுத்திய கார் வணிகத்தின் துணைத் தலைவர் திரு வரிந்தர் வாத்வா, “டொயோட்டா லெஜெண்டரின் புதிய தரத்தை வெளியிடுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்,

குறிப்பாக எங்கள் மதிப்புமிக்க வாடிக்கையாளர்களின் வளர்ந்து வரும் கோரிக்கைகள் மற்றும் விருப்பங்களுக்கு பதிலளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

எம்டி மாறுபாட்டின் இந்த புதிய சேர்க்கை லெஜெண்டர் இன் முறையீட்டை மேலும் அதிகரிப்பது மட்டுமல்லாமல்,

இன்றைய வாடிக்கையாளரின் மாறும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பல்துறை தீர்வுகளை வழங்குவதற்கான டொயோட்டோவின் உறுதிப்பாட்டை வலுப்படுத்தும்.

பிரீமியம் எஸ்யூவி சிறப்பின் எல்லைகளை நாங்கள் தள்ளுவதால், சந்தையில் ஒரு முக்கிய இடைவெளியை நாங்கள் நிவர்த்தி செய்கிறோம் என்று நாங்கள் நம்புகிறோம், ஒவ்வொரு இயக்கியும் மிகவும் ஆற்றல் மிக்கதாகவும், அதிவேகமாகவும், இந்திய வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்பவும் இருப்பதை உறுதி செய்கிறோம்.

வடிவமைப்பு தத்துவம் எதிர்கால அழகியலை டைனமிக் சாலை இருப்புடன் ஒருங்கிணைக்கிறது. கட்டுமரத்தால் ஈர்க்கப்பட்ட முன் மற்றும் பின்புற பம்பர்கள், பியானோ கருப்பு உச்சரிப்புகளுடன் முடிக்கப்பட்ட கூர்மையான மற்றும் நேர்த்தியான முன் கிரில், ஒரு குறிப்பிடத்தக்க மற்றும் அதிநவீன தோற்றத்தை உருவாக்குகின்றன.

வாட்டர்ஃபால் எல்இடி லைன் கைடு சிக்னேச்சருடன் கூடிய ஸ்பிளிட் குவாட்-எல்இடி ஹெட் லேம்ப்கள் மேம்பட்ட தெரிவுநிலையை உறுதி செய்கின்றன, அதே நேரத்தில் தொடர்ச்சியான டர்ன் இன்டிகேட்டர்கள் எஸ்யூவியின் நவீன மற்றும் மாறும் முறையீட்டை சேர்க்கின்றன. 18 அங்குல பல அடுக்கு இயந்திர-வெட்டு முடிக்கப்பட்ட அலாய் சக்கரங்களில் அமர்ந்து, லெஜெண்டர் அதன் கட்டளையிடும் சாலை இருப்பை பூர்த்தி செய்யும் ஒரு சக்திவாய்ந்த நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது.

# தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் வேண்டுகோளுக் கிணங்க, தமிழக மக்களை கோடைக் கால வெப்பத்திலிருந்து காக்கும் வகையில், தி.மு.க. சார்பில்,தமிழகமெங்கும் “தண்ணீர் - நீர்மோர் பந்தல்” அமைத்திடுக! தலைமைக் கழகம் அறிவிப்பு

சென்னை 06, மார்ச் 2025: மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் வேண்டுகோளுக் கிணங்க, தமிழகத்தில் பெரும்பாலான மாவட்டங்களில் கோடைக் கால வெப்பம் அதிகரிக்கத் தொடங்கி, மார்ச் மாத துவக்கத்திலேயே வெப்பம் அதிகரித்துள்ள நிலையில் தமிழக மக்களை இக்கோடைக் கால வெப்பத்திலிருந்து காக்கும் வகையில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், தமிழகத்தில் உள்ள மாநகர, நகர, பகுதி, பேரூர், வட்டம் மற்றும் கிராமங்கள் என அனைத்து இடங்களிலும் - மக்கள் அதிகம் கூடும் இடங்களான தெரு முனைச் சந்திப்புகளிலும் - சாலை மற்றும் தெருக்கள் ஓரமாகவும், போக்குவரத்து மற்றும் பொது மக்கள் யாருக்கும் எவ்வித இடையூறு இல்லாமல் “தண்ணீர் பந்தல்” அமைத்து, பொதுமக்களின் தாகம் தீர்த்திட வேண்டுமெனவும்; அவ்வாறு தி.மு.க. சார்பில் அமைக்கப் பட்ட தண்ணீர் பந்தலில் குடிநீர், நீர்மோர், இளநீர், குளிர்பானம், தர்பூசணி போன்ற கோடை வெப்பத்தை தணிக்கும் பொருட்களை பொது மக்களுக்கு வழங்கி, அவர்களின் தாகத்தை தணிக்க வேண்டுமெனவும்; மாவட்ட - மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் - வட்ட - கிளைக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்பு களின் பிரதிநிதிகள், கோடை காலம் முழுவதும் இத்தண்ணீர் பந்தல் தொடர்ந்து செயல்பட, தங்களை இப்பணியில் முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

# புழல் பகுதியில் பழைய இரும்பு கடையில் கத்தியைக் காட்டி மிரட்டி பணம் பறித்துச் சென்ற நபர் கைது.

சென்னை 06, மார்ச் 2025: சென்னை, புழல் முகாம், ஜி.என்.டி. சாலையில் வசிக்கும் காளியப்பன், வ/59, த/பெ.ராமசாமி என்பவர் புழல், கதிர்வேடு, ஜி.என்.டி. சாலையில் பழைய இரும்பு மற்றும் பேப்பர் வாங்கும் காயலான் கடை நடத்தி வருகிறார். காளி யப்பன் 03.03.2025 அன்று மதியம் மேற்படி கடையில் இருந்த போது, அங்கு வந்த கணேஷ் (எ) ஆட்டோ கணேஷ் என்பவர் காளியப்பனிடம் பணம் கேட்டுள்ளார். காளியப்பன் பணம் தர



மறுக்கவே, கணேஷ் தான் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து காளியப்பனிடம் காட்டி மிரட்டி அவர் வைத்திருந்த பணம் ரூ.3,000/-ஐ பறித்துக் கொண்டு கொலை மிரட்டல் விடுத்து அங்கிருந்து தப்பிச் சென்றார். இது குறித்து காளியப்பன் எம்-3 புழல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற் கொண்டனர்.

எம்-3 புழல் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான தனிப்படை போலீசார், தீவிர விசாரணை மற்றும் தேடுதலில் ஈடுபட்டு, மேற்படி வழக்கில் சம்பந்தப் பட்ட கணேஷ் (எ) ஆட்டோ கணேஷ், வ/36, த/பெ.சுப்ரமணி, மகாத்மா காந்தி நகர் 3 வது தெரு, கொளத்தூர், சென்னை என்பவரை கைது செய்தனர். அவரிட மிருந்து ரூ.900 மற்றும் குற்றச் செயலுக்கு பயன் படுத்திய 1 கத்தி பறிமுதல் செய்யப் பட்டது.

விசாரணையில் கைது செய்யப்பட்ட கணேஷ் மீது ஏற்கனவே 17 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி கணேஷ் விசாரணைக்குப் பின்னர் சிதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

# சேத்துப்பட்டு மெத்தம் பெட்டமைன் வழக்கில் தலைமறைவாகயிருந்த மேலும் ஒருவர் கைது. 3.07 கிராம் மெத்தம்பெட்டமைன் பறிமுதல்.

சென்னை 06, மார்ச் 2025: ஜி-7 சேத்துப்பட்டு காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான தனிப் படை போலீசாருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில், தனிப்படை போலீசார் கடந்த 07.02.2025 அன்று இரவு சேத்துப் பட்டு, ஜோதியம்மாள் நகர், நமச்சிவாயபுரம் பாலம் அருகே கண்காணித்து, அங்கு கார் மற்றும் இருசக்கர வாகனத்தில் மெத்தம் பெட்டமைன் மற்றும் கஞ்சா ஆகிய போதைப் பொருள் வைத்திருந்த 1.பைஜுர் ரகுமான், வ/33, த/பெ.முகமது பாண்டிச் சேரி, 2.கிருபாகரன், வ/28, த/பெ.சேகர், ஆவடி, 3.கொடவதி கண்டி சுனில்பாபு, வ/23,



த/பெ.பிரசாந்த், திருமுல்லைவாயல், 4.ஆகாஷ், வ/27, த/பெ.பாஸ்கர், பரணிபுதூர், ஆகிய 4 நபர்களை கைது செய்தனர்.

அவர்களிடமிருந்து 3.6 கிராம் எடை கொண்ட மெத்தம் பெட்டமைன், 90 கிராம் எடை கொண்ட கஞ்சா, குற்றச் செயலுக்கு பயன் படுத்திய 1 கார், 1 இருசக்கர வாகனம் மற்றும் 1 ஐபோன் உட்பட 4 செல் போன்கள் பறிமுதல் செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப் பட்டனர்.

கடந்த 14.02.2025 அன்று தலைமறை வாகயிருந்த முக்கிய குற்றவாளி பாலஹரி நிவா, வ/26, த/பெ.சுரேஷ்பாபு, ஆசாத் நகர், இராயப்பேட்டை, சென்னை என்பவரை தனிப்படை காவல் குழுவினர் கைது செய்து. அவரிட மிருந்து 0.7 கிராம் மெத்தம் பெட்டமைன் மற்றும் 1 ஐ-போன் பறிமுதல் செய்யப் பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டார். இதனை தொடர்ந்து 04.03.2025 அன்று ஜி-7 சேத்துப்பட்டு காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்டு தலைமறைவாகயிருந்த மணிகண்டன், வ/25, த/பெ.ராகவன், குமாரசாமி நகர், கொரட்டூர், சென்னை என்பவரை கைது செய்தனர்.

அவரிடமிருந்து 3.07 கிராம் மெத்தம் பெட்டமைன், 1 ஆப்பிள் ஐ-போன் மற்றும் 1 இருசக்கர வாகனம் ஆகியவை பறிமுதல் செய்யப் பட்டது. கைது செய்யப் பட்ட எதிரி மணிகண்டன் விசாரணைக்குப் பின்னர் 05.03.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப் படவுள்ளார்.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்விசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி



# பாராளுமன்றத் தொகுதிகள் மறுவரையறை தொடர்பான அனைத்துக் கட்சி கூட்டத்தில் மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் திரு. கமல்ஹாசன் அவர்கள் ஆற்றிய உரை.

சென்னை 06, மார்ச் 2025:மக்கள் தொகை அடிப்படையிலான பாராளுமன்றத் தொகுதிகளின் மறுவரையறை என்பது தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல ஆந்திரா, கர்நாடகா, கேரளா, பஞ்சாப், ஒடிஸா, மேற்கு வங்கம், ஹிமாச்சல், உத்தராகாண்ட், வடகிழக்கு போன்ற மாநிலங்களுக்கும் பாதிப்புகளை ஏற்படுத்த வல்லது என்பதை உணர்ந்து அனைத்துக் கட்சி கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும், மக்கள் நலனுக்காக கொள்கை முரண்களை ஒதுக்கி விட்டு இந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருக்கும் தமிழ்நாட்டின் பிற கட்சிகளையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை தீயிலிடப்பட்ட வைக்கோல் போல கருகிவிடும் எனும் வள்ளுவனாரின் இலக்கணப்படி இந்தத் தேசத்தை ஆபத்து சூழும் முன் நாம் இங்கே குழுமி இருக்கிறோம்.

இரண்டாண்டுகளுக்கு முன்னர் நடந்த இந்தியா டுடே மாநாட்டில் என்னிடம் 'தொகுதி மறுவரையறை' பற்றிய கேள்வி எழுப்பப்பட்டபோது தேச வளர்ச்சிக்காக ஒத்துழைத்து மக்கள் தொகையைக் கட்டுப்படுத்திய மாநிலங்கள் தண்டிக்கப்படலாகாது என்று சொன்னேன்.

நண்பர்களே, இந்த விவகாரத்தில் நாம் கருத்தில் கொள்ள வேண்டிய இரண்டு முக்கிய அம்சங்கள் ஜனநாயகமும், கூட்டாட்சித் தத்துவமும். இந்த இரண்டுமே இரண்டு கண்களைப் போன்றது. இந்த இரு கண்களை வைத்துத்தான் ஒரே பார்வையில் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியடைந்த இந்தியா எனும் லட்சியத்தை அடைய முடியும்.

1976-லும் சரி 2001-லும் சரி அப்போது இருந்த இந்தியப் பிரதமர்கள் வெவ்வேறு கட்சிகள், வெவ்வேறு கொள்கைகளைக் கொண்டவர்களாக இருந்தாலும் கூட்டாட்சித் தத்துவத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து மக்கள் தொகை அடிப்படையிலான பாராளுமன்றத் தொகுதி மறுவரையறையை கையில் எடுக்கவில்லை.

1976-ல் இந்தியா ஒரு பின் தங்கிய நாடாக உலக அரங்கில் கருதப்பட்டது. அப்போது நமது மக்கள் தொகை 55 கோடி. நமது பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 543.

ஞாடந்த 50 ஆண்டுகளில் நமது மக்கள் தொகை 145 கோடியாக உயர்ந்த போதும், இதே 543 நாடாளுமன்ற உறுப்பினர்களின் பங்கேற்போடு நாம் முன்னேறி இருக்கிறோம். அனநாயகமும், கூட்டாட்சித் தத்துவமும் தேசிய அளவில் நிலை பெற்றிருக்க இந்த எண்ணிக்கை போதுமானது என்பதையே இது குறிக்கிறது.

ஆகவே மக்களவையிலும் சரி மாநிலங்களவையிலும் சரி தற்போதுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையை மாற்ற வேண்டிய அவசியமே இல்லை என்பதே மக்கள் நீதி மய்யத்தின் கருத்து. தேர்தல் அரசியலில் எந்தக் கூட்டணி வென்று ஆட்சிக்கு வந்தாலும், எங்களது நிலைப்பாடு இதுதான்.

ஒன்றிய அரசு தீட்டுகிற திட்டங்கள் எதுவாக இருந்தாலும், அவற்றை பெரும்பாலும் நடைமுறைப் படுத்துவது மாநில அரசுகள்தான். மக்கள் தொகைக்கு ஏற்ப அதிகரிக்கப்பட வேண்டியது சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கைதானே தவிர பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அல்ல.

இவையெல்லாம் தவிர, எந்தத் தேவையும் இன்றி பாராளுமன்றத் தொகுதி மறுவரையறை எனும் பேச்சை யார் கிளப்புகிறார்கள்? எந்த நேரத்தில் பேசுகிறார்கள்? எதற்காகப் பேசுகிறார்கள் என்பதும் கவனத்துக்குரியது.

மாநிலங்களின் உரிமைகளில் தலையிடுகிற, வருடாந்திர பட்ஜெட்டில் தேர்தல் வரவிருக்கிற மாநிலங்களுக்கு மட்டுமே அதிக நிதி ஒதுக்குகிற, தமிழ்நாட்டிற்கான நியாயமான நிதிப்பகிர்வை மறுக்கிற, பேரிடர்க் காலங்களில் நமது கூக்குரலுக்குச் செவி சாய்க்காத, மும்மொழிக் கொள்கை எனும் பெயரில் ஹிந்தியைத் திணிக்கிற, என் பேச்சைக் கேட்டால்தான் நிதி தருவேன் என மிரட்டுகிற ஒரு நடுவண் அரசு யதேச்சதிகாரமாக எடுக்கிற முடிவு இது.

அடுத்து, எந்த நேரத்தில் எடுக்கிறார்கள் என்பதையும் பார்க்கவேண்டும். கொரானாவைக் காரணம் காட்டி மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்தாமல் விட்டு விட்டு அதை 2026-ல் செயல்படுத்துவதன் நோக்கமே தனக்கு சாதகமான களநிலவரம் கொண்ட ஹிந்தி பேசும் மாநிலங்களை ஒரணியில் திரட்டி அறுதிப் பெரும்பான்மையுடன் தேர்தலை வெல்வதுதான். நாம் கனவு காண்பது அனைவரையும் உள்ளடக்கிய மிழிஞிமிகி. இவர்கள் உருவாக்குவது 'ஹிந்தியா'. ஞுடையாத பொருளை ஏன் ஒட்ட வைக்க முயற்சிக்கிறீர்கள்? தவிர, நன்றாக ஓடிக் கொண்டிருக்கும் ஜனநாயகத்தை அடிக்கடி பணிமனைக்கு அனுப்ப வேண்டியதும் இல்லை.

எந்த வகையில் பாராளுமன்றத் தொகுதிகளை மறுவரையறை செய்தாலும் அதனால் பாதிக்கப்படப் போவது ஹிந்தி பேசாத மக்கள் வாழும் மாநிலங்களே. கூட்டாட்சித் தத்துவத்தைக் கேள்விக்குள்ளாக்கும் இந்த முயற்சி தேவையற்றது.

இன்றல்ல, நாளையல்ல எப்போதுமே பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் எந்த மாற்றமும் கொண்டு வராமல் இருப்பதே ஜனநாயகத்தையும், கூட்டாட்சித் தத்துவத்தையும் இந்தியாவின் பன்மைத்துவத்தையும் காக்கும் என்பதை ஓர் இந்தியனாகவும், தமிழனாகவும், மக்கள் நீதி மய்யத்தின் சார்பாகவும் வலியுறுத்துகிறேன்.

# நீட் தேர்வுக்கு எதிரான மசோதா: விரைவில் ஒப்புதல் பெற்றுத்தர வேண்டும். மத்திய அமைச்சரிடம் மா.சுப்பிரமணியன் நேரில் வலியுறுத்தல்

சென்னை, 06 மார்ச் 2025: கோவையில் புதிய எய்ம்ஸ் ஆஸ்பத்திரி அமைக்க வேண்டும், நீட் தேர்வுக்கு எதிரான மசோதாவுக்கு விரைவில் ஒப்புதல் பெற்றுத்தர வேண்டும் என்பது உள்ளிட்ட 11 கோரிக்கைகள் அடங்கிய கடிதத்தை டெல்லியில் மத்திய அமைச்சர் ஜே.பி.நட்டாவிடம், அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேரில் வழங்கினார்.

பின்னர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் நிருபர்களிடம் கூறியதாவது:- மத்திய சுகாதாரத்துறை அமைச்சரிடம் 11 கோரிக்கைகள் அடங்கிய மனுவை வழங்கி விவாதித்தோம். கோரிக்கைகள் தனித்தனியாக கலந்து ஆலோசனை செய்யப்பட்டது. தமிழ்நாட்டில் தற்போது 36 மருத்துவக் கல்லூரிகள் இருக்கிறது. 6 மாவட்டங்களில் மருத்துவக் கல்லூரி இல்லை. இதுகுறித்து, முதலமைச்சர் தொடர்ந்து மத்திய அரசை கடிதம் மூலம் வலியுறுத்தி வருகிறார்.

மயிலாடுதுறை, தென்காசி, காஞ்சீபுரம், பெரம்பலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர் ஆகிய 6 இடங்களுக்கு மருத்துவக் கல்லூரி வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

அதேபோல, நாமக்கல், திருப்பூர், விருதுநகரில் உள்ள மருத்துவக் கல்லூரிகளில் 150 மாணவர்கள் படிப்பதற்கான கட்டமைப்பு உள்ளது. ஆனால், 100 மருத்துவ இடங்கள் மட்டுமே கிடைக்கிறது. 50 மருத்துவ இடங்களை கூடுதலாக ஒதுக்கீடு செய்ய வேண்டுமென கேட்டுள்ளோம். தமிழ்நாட்டில் கூடுதலாக ஆரம்ப சுகாதார நிலையங்கள், நகர்ப்புற சுகாதார நிலையங்கள் குறித்த கோரிக்கையும் வைக்கப்பட்டு உள்ளன. ஈரோடு, திருப்பத்தூர், ராணிப்பேட்டை, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் புற்று நோய் பரிசோதனைகள் நடந்து வருகிறது. காஞ்சீபுரத்தில் புற்றுநோய் ஆராய்ச்சி மையம் கட்டுமான பணி முடிந்து இந்த ஆண்டு இறுதிக்குள் திறக்கப்படும்.

மேலும், தமிழ்நாடு முழுவதும் புற்றுநோய் கட்டமைப்புகளை மேம்படுத்த ரூ.447.94 கோடியும், 22 மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரிகளுக்கு ரூ.603.45 கோடி மதிப்பீட்டில் நரம்பியல் துறையை மேம்படுத்தவும் நிதி வழங்கக்கோரிக்கை விடுத்துள்ளோம். நீட் தேர்வில் இருந்து விலக்கு அளிக்க வேண்டும். நெக்ஸ்ட் தேர்வை நடைமுறைப் படுத்தக்கூடாது எனவும் வலியுறுத்தியுள்ளோம்.

மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுமானப் பணிகள் நடந்து வருகிறது. தமிழ்நாட்டில் கோவையில் 2-வது எய்ம்ஸ் ஆஸ்பத்திரி அமைக்க வேண்டுமென கோரிக்கை வைத்துள்ளோம். இதுகுறித்து விரைந்து பரிசீலனை செய்யப்படும் என கூறியுள்ளார். இவ்வாறு அவர் கூறினார். அப்போது மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை செயலாளர் செந்தில் குமார், தேசிய நலவாழ்வு குழும இயக்குனர் அருண் தம்புராஜ், தமிழ்நாடு இல்லம் உள்ளுரை கமிஷனர் ஆஷிஷ் குமார் ஆகியோர் உடன் இருந்தனர்.

# சாம்சங் நிர்வாகத்தின் தொழிலாளர் விரோத நடவடிக்கைக்கு சிபிஐ (எம்) கண்டனம்! தமிழக அரசு தலையிட்டு தீர்வு காண வலியுறுத்தல்!!

சென்னை 06, மார்ச் 2025: காஞ்சிபுரம் மாவட்டம் சுங்குவார் சத்திரம் பகுதியில் செயல்பட்டு வரும் சாம்சங் இந்தியா தொழிற் சாலையில் கடந்த ஆண்டு பல கட்ட போராட்டங்களை மேற்கொண்டு தொழிற் சங்கம் அமைக்கும் உரிமையை தொழிலாளர்கள் பெற்றனர். இந்நிலையில் கடந்த மாதம் சாம்சங் இந்தியா தொழிற்சாலையில் சிஐடியு தொழிற்சங்கம் அமைப்பதற்கு போராட்டம் நடத்திய சங்கத்தின் 3 தலைமை தொழிலாளர்களை ஒழுங்கு நடவடிக்கை என்ற பெயரில் சாம்சங் நிர்வாகம் பணியிடை நீக்கம் செய்தது. இதனைக் கண்டித்தும், சாம்சங் நிறுவனத்தின் தொழிலாளர் விரோத பழிவாங்கல் நடவடிக்கையை கைவிட வலியுறுத்தியும் 2025 பிப்ரவரி 5ஆம் தேதி முதல் 1300க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் தொடர்ந்து போராடி வருகின்றனர். இந்த போராட்டத்திற்கு சுமூகத் தீர்வு காண்பதற்கு தொழிலாளர் நலத்துறை முன்னிலையில் 10 கட்ட பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டும் இதுவரை எந்த முடிவும் எட்டப்படாமலேயே தொடர்கிறது.

தொழிலாளர்கள் சங்கம் வைத்த ஒரே காரணத்திற்காக அவர்களின் தொழிற்சங்கத்தை ஏற்க மறுப்பதும், அதை முற்றிலுமாக அழிக்க முனையும் தீய நோக்கத்தோடு சாம்சங் நிர்வாகம் தொடர்ந்து செயல்பட்டு வருவதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாக கண்டிக்கிறது.

சாம்சங் நிர்வாகத்தின் தொழிலாளர் விரோத நடவடிக்கைகளை தொழிற்சாலையின் தலைமை நிர்வாக மேலாளருக்கு எடுத்துரைப்பதற்காக சென்ற சங்கத்தின் தலைமை நிர்வாகிகள் மூன்று பேரை நிர்வாகம் பணியிடை நீக்கம் செய்தது. இந்த பழிவாங்கல் நடவடிக்கையை கண்டித்தும், திரும்ப பெற வலியுறுத்தியும் தொழிலாளர்கள் உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த பிரச்சனையை முடிவுக்கு கொண்டு வர நிர்வாகமும், தொழிலாளர் துறையும் தெரிவித்த ஆலோசனையை தொழிற்சங்கம் ஏற்று அமலாக்க முன்வந்த போது நிர்வாகம் 1600க்கும் மேற்பட்ட வெளி ஆட்களை வைத்து சட்டவிரோத உற்பத்தியில் தொடர்ந்து ஈடுபட்டு நிரந்தர தொழிலாளர்களை ஆலையை விட்டு வெளியேற்ற முயற்சித்தது. இதுகுறித்து உரிய முறையில் தகுந்த ஆதாரங்களுடன் மூன்று முறை புகார் அளித்தும் தொழிற்சாலைத்துறை எந்த நடவடிக்கையும் எடுக்காமல் சாம்சங் நிர்வாகத்திற்கே ஆதரவாக செயல்பட்டது. இந்த பின்னணியில் சாம்சங் தொழிலாளர்கள் வெளி ஆட்களை அப்புறப்படுத்த வலியுறுத்திய போது மேலும் 20 தொழிற் சங்க நிர்வாகிகளை நிர்வாகம் வேண்டுமென்றே ளுள்நோக்கத்துடன் நேரிடையாக பணியிடை நீக்கம் செய்தது.

அனைத்து தொழிலாளர்களையும் வேலைக்கு எடுத்துக் கொள்ளவும், இப்பிரச்சனைக்கு சுமூகத் தீர்வு காணவும் தொழிலாளர் நலத்துறை அதிகாரிகள், சாம்சங் நிர்வாகம், தொழிற்சங்க நிர்வாகிகள் முன்பு நடந்த சமரசப் பேச்சுவார்த்தையில் தொழிலாளர்கள் வேலைக்கு செல்ல சம்மதித்த நேரத்தில் சாம்சங் நிர்வாகம் சங்கத்தை நிர்மூலமாக்கும் நோக்கத்துடன் ஒவ்வொரு தொழிலாளியும் மன்னிப்பு கடிதம் எழுதி தர வேண்டுமென்றும், ரூடந்தவற்றிற்கு ஒவ்வொரு தொழிலாளியும் தன்னுடைய தனி குற்றமாக பொறுப்பேற்க வேண்டும் என்றும் கடிதம் எழுதிக் கொடுத்த பின்னரே ஆலைக்குள் விடுவோம் என்று நிபந்தனை விதித்ததுடன், தண்டணையாக 8 நாள் சம்பளமும் பிடித்தம் செய்துள்ளது. இவையனைத்தும் தொழிற் சாலை சட்டத்திற்கும், இந்திய தொழில் தகராறு சட்டத்திற்கும், இயற்கை நீதிக்கும் முற்றிலும் விரோதமானது என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சுட்டிக்காட்ட விரும்புகிறது. இந்தியாவில் செயல்படும் சாம்சங் நிர்வாகம் இந்திய நாட்டின் தொழிற்சாலை சட்டங்களையும், தொழிற்சங்க சட்டங்களையும் மதித்து செயல் படுவதற்கு தமிழக அரசு உரிய முறையில் சாம்சங் நிர்வாகத்திற்கு அறிவுறுத்த வேண்டுமென மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கேட்டுக் கொள்கிறது. எனவே, பணி நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்கள் உட்பட அனைவருக்கும் எந்தவித நிபந்தனையுமின்றி உடனடியாக வேலை வழங்கிட வேண்டுமெனவும், சாம்சங் நிர்வாகத்தின் பழிவாங்கல் நடவடிக்கையை முற்றிலும் கைவிடவும், இப்பிரச்சனையில் தமிழக அரசும், தொழிலாளர் நலத் துறையும் உடனடியாக தலையிட்டு சுமூகத் தீர்வு காண வேண்டுமெனவும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வலியுறுத்துகிறது.

# எதிர்கால சந்ததியினருக்கு உணவுப் பாதுகாப்பு மற்றும் மரபணு வளங்களை உறுதி செய்ய மரபணு வங்கி விரிவுப்படுத்தப்படும் : பிரதமர் நரேந்திர மோடி

சென்னை, 06 மார்ச் 2025: மத்திய பட்ஜெட்டுக்குப் பிந்தைய கலந்துரையாடல் நிகழ்ச்சியில் காணொலி மூலம் பங்கேற்ற பிரதமர் திரு நரேந்திர மோடி, நாட்டின் மரபணு வளங்களைப் பாதுகாக்க மரபணு வங்கி விரிவுப்படுத்தப்படும் என்று அறிவித்தார். எதிர்கால சந்ததியினருக்கு மரபியல் வளங்கள் மற்றும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

மரபணு வங்கி என்பது பல்வேறு தாவர இனங்களிலிருந்து சேகரிக்கப்படும் விதைகள், மகரந்தம் போன்ற மரபுப் பொருட்களைச் சேமித்து வைக்கும் களஞ்சியமாகும். இது எதிர்கால சந்ததியினருக்கு முக்கிய தாவர வகைகளைப் பாதுகாத்து வைக்க உதவுகிறது.

இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் தேசிய தாவர மரபணு வளங்கள் பணியகம் சார்பில் இந்தியாவின் முதல் மரபணு வங்கி 1996 ஆம் ஆண்டில் புது தில்லியில் அமைக்கப் பட்டது. இந்த வங்கி முக்கிய பயிர்களின் மூலக்கூறுகளை சேகரிக்க நாடு முழுவதும் 12 மண்டலங்களில் துணை நிலையங்களைக் கொண்டுள்ளது. இவை ஆராய்ச்சி, பாதுகாப்பு மற்றும் பயிர் இனப்பெருக்கத்திற்குப் பயன்படுத்தப் படுகின்றன.

இந்தியாவின் வேளாண் பல்லுயிர் பெருக்கத்தைப் பாதுகாக்க 2025-26 பட்ஜெட்டில் இரண்டாவது தேசிய மரபணு வங்கி நிறுவப்படுவதாக நிதி அமைச்சகம் அறிவித்துள்ளது.

இரண்டாவது தேசிய மரபணு வங்கி நிறுவப்படுவதன் மூலம், உலகளாவிய பல்லுயிர் பாதுகாப்பில் இந்தியா முன்னோடியாகத் திகழ்வது உறுதி செய்யப்படும். இந்தப் புதிய வசதி இந்தியாவின் விலை மதிப்பற்ற தாவர மரபணு வளங்களைப் பாதுகாப்பதோடு மட்டுமல்லாமல், சர்வதேச பல்லுயிர் முயற்சிகளுக்கும் ஆதரவளிக்கும். குறிப்பாக சார்க் மற்றும் பிரிக்ஸ் கூட்டமைப்பில் உள்ள நாடுகளுக்கு உதவிகளை வழங்கும்.

# வேலூரில் 36 வழித் தடத்தில் மினி பஸ்கள்: கலெக்டர் சுப்புலெட்சுமி தகவல்

சென்னை, 06 மார்ச் 2025: வேலூர் மாவட்டத்தில் 36 வழித்தடங்களில் மினி பஸ்கள் இயக்க உத்தேசிக்கப்பட்டுள்ள வழித் தடங்கள் குறித்து பேருந்து உரிமையாளர்களுடனான ஆலோசனைக் கூட்டம் கலெக்டர் சுப்புலெட்சுமி தலைமையில் நடைபெற்றது. பொது மக்களின் நலன் கருதி அதிக குடும்பங்களை கொண்ட கிராமங்கள், குக்கி ராமங்கள், குடியிருப்புகள் உள்ள மக்களுக்கு சாலை போக்குவரத்து சேவையை வழங்குவதற்காக மினி பேருந்திற்கான புதிய விரிவான திட்டம் வெளியிடப் பட்டுள்ளது.

அதன்படி வேலூர் மாவட்டத்தில் 36 புதிய வழித்தடங்கள் கண்டறியப்பட்டு தேர்வு செய்யப்பட்டது. இந்த 36 புதிய வழித்தடங்களில் மினி பஸ்கள் இயக்குவது தொடர்பாக கலெக்டர் சுப்புலெட்சுமி தலைமையில் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் மற்றும் மினி பேருந்து உரிமையாளர் சங்கத்தினர்களுடன் ஆலோசனைக்கூட்டம் ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் 36 புதிய வழித்தடங்களில் மினி பஸ்கள் இயக்க விரும்பும் தனியார் பேருந்து உரிமையாளர்கள், மினி பேருந்து உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் வரும் மார்ச் 7ம் தேதிக்குள் வேலூர், வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் விண்ணப்பிக்கலாம் என கலெக்டர் தெரிவித்தார். இக்கூட்டத்தில் வட்டார போக்குவரத்து அலுவலர் சுந்தரராஜன் மற்றும் உரிமையாளர்கள் கலந்து கொண்டனர்.

## பிஎஸ்பி ப்ராஜெக்ட்ஸ் நிறுவன ஈக்விட்டி பங்குகளை அதானி இன்ஃப்ரா நிறுவனம் வாங்க இந்திய போட்டி ஆணையம் ஒப்புதல்

சென்னை, 06 மார்ச் 2025: அதானி இன்ஃப்ரா (இந்தியா) நிறுவனம் பிஎஸ்பி ப்ராஜெக்ட்ஸ் நிறுவனத்தின் ஈக்விட்டி பங்குகளை வாங்குவதற்கு இந்திய போட்டி ஆணையம் ஆணையம் ஒப்புதல் அளித்துள்ளது.

முன்மொழியப்பட்ட பரிவர்த்தனையின் அடிப்படையில் அதானி இன்ஃப்ரா நிறுவனம் பிஎஸ்பி ப்ராஜெக்ட்ஸ் நிறுவனத்தின் ஈக்விட்டி பங்குகளை கையகப்படுத்தியுள்ளது.

அதானி இன்ஃப்ரா நிறுவனம் மின் உற்பத்தி மற்றும் டிரான்ஸ்மிஷன் துறைக்கான விரிவான பொறியியல், திட்ட மேலாண்மை மற்றும் கட்டுமான சேவைகளில் நிபுணத்துவம் பெற்ற ஒரு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனமாகும்.

இந்த நிறுவனம் சாலை, நீர் மற்றும் மின் திட்டங்களுக்கான திட்ட மேலாண்மை, ஆலோசனை மற்றும் பொறியியல் கட்டுமானம் ஆகிய சேவைகளை வழங்குகிறது.

## தேசிய ஆடை வடிவமைப்பு தொழில் நுட்ப நிறுவனத்தின் ஸ்பெக்ட்ரம் 2025

சென்னை, 06 மார்ச் 2025: தேசிய ஆடை வடிவமைப்பு தொழில் நுட்ப நிறுவனத்தின் (என்.ஐ.எஃப்.டி) வருடாந்திர கலாச்சார விழாவான ஃபேஷன் ஸ்பெக்ட்ரம் கலை, ஃபேஷன், இசை மற்றும் படைப்பாற்றலின் துடிப்பான கொண்டாட்டமாகும்.

பல ஆண்டுகளாக, இது பல்வேறு பின்னணியைச் சேர்ந்த மாணவர்களை ஒன்றிணைத்து அவர்களின் திறமைகளையும் யோசனைகளையும் வெளிப்படுத்தும் ஒரு தளமாக திகழ்ந்துள்ளது. இந்த விழா மாணவர்களின் படைப்பாற்றலை முன்னிலைப்படுத்துவது மட்டுமல்லாமல், ஃபேஷன் துறையின் வளர்ந்து வரும் கலாச்சார சூழலை பிரதிபலிக்கிறது.

ஸ்பெக்ட்ரம் 2025 பதிப்பு "கார்னியஸ்டா" என்ற கருப்பொருளில் அமைந்துள்ளது. இது கொண்டாட்டம், பன்முகத்தன்மை மற்றும் ஒற்றுமையின் உணர்வைக் காட்சிப்படுத்துகிறது. கார்னியஸ்டா என்பது வண்ணங்கள் மற்றும் செயல்பாடுகளுக்கு அப்பாற்பட்ட நிகழ்வாகும். இது பல்வேறு தரப்பு மக்களை ஒன்றிணைக்கிறது, கலை, இசை மற்றும் பகிரப்பட்ட அனுபவங்கள் மூலம் அவர்களை ஒன்றிணைக்கிறது.

இந்த ஆண்டு, ஸ்பெக்ட்ரம் விழா மார்ச் 6 மற்றும் 7-ஆம் தேதிகளில் சென்னை என்.ஐ.எஃப்.டி வளாகத்தில் நடைபெறும். திறமை மற்றும் போட்டியின் மாறுபட்ட கலவையுடன், ஸ்பெக்ட்ரம் 2025, 13 துடிப்பான நிகழ்வுகளை உள்ளடக்கி இருக்கிறது. யூனது 30 வருட சிறப்பைக் குறிக்கும் வகையில், புதுமை, உள்ளடக்கம் மற்றும் கலை வெளிப்பாடு ஆகியவற்றை வளர்ப்பதில் என்.ஐ.எஃப்.டி நிறுவனத்தின் வளமான பாரம்பரியத்திற்கு ஸ்பெக்ட்ரம் தொடர்ந்து ஒரு சான்றாக உள்ளது.

## சென்னையில் இப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சி: துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்பு




சென்னை, 06 மார்ச் 2025: இந்தியாவிலேயே சிறுபான்மை மக்களுக்கு சொந்த வீடு போல இருக்கும் மாநிலம் தமிழ்நாடு என இப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

ரம்ஜான் பண்டிக்கையை முன்னிட்டு, தமிழ்நாடு வக்பு வாரியத்தின் ஒருங்கிணைப்பில் ஏழை, எளிய மக்களுக்கு உணவு பொருட்கள் வழங்கும் விழா மற்றும் இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி ஆகியவை சென்னை ராயப்பேட்டையில் உள்ள ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் நேற்று நடந்தது.

நிகழ்ச்சிக்கு தமிழ்நாடு வக்பு வாரியத்தின் தலைவர் நவாஸ்கனி எம்.பி. தலைமை தாங்கினார். சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் முன்னிலை வகித்தார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு, ஏழை, எளிய மக்களுக்கு உணவு பொருட்களை வழங்கினார். தொடர்ந்து, இப்தார் நோன்பு கஞ்சி குடித்தார்.

நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது:-

அனைவருக்கும் ரம்ஜான் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். நான் வாழ்த்து சொல்வதால் பலருக்கு கோபம் வருகிறது என்றால் 100 முறை கூட சொல்வேன். இந்தியாவிலேயே சிறுபான்மை மக்கள் சொந்த வீடாக இருக்கும் மாநிலம் தமிழ்நாடு என்று தைரியமாக சொல்லலாம்.

சிறுபான்மை மக்கள் மனதில் பெரும்பான்மையான இடத்தை பிடித்தது தி.மு.க. தான். முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் வழியில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இஸ்லாமிய மக்களுக்கு துணை நின்று வருகிறார்.

வக்பு வாரிய திருத்த மசோதா - மத்திய அரசு சிறுபான்மை மக்களுக்கு எதிராக என்னென்ன செய்யலாம் என தொடர்ந்து திட்டம் போட்டு தினந்தோறும் ஒரு சட்டத்தை செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. அதை கடுமையாக எதிர்க்கும் அரசு தி.மு.க. அரசு தான். அந்த வகையில் வக்பு வாரிய திருத்த மசோதாவை மத்திய அரசு கையில் எடுத்துள்ளது.

அதை நடைமுறைப் படுத்த துடித்துக் கொண்டிருக்கிறது. வக்பு வாரிய திருத்த மசோதா அமலுக்கு வந்தால், வக்பு வாரிய சொத்துகள் வாரியங்களிடம் இருந்து அபகரிக்கும் அபாய நிலைக்கு தள்ளப்படும்.

முஸ்லிம்கள் அல்லாதவர்களையும் அந்த வாரியத்தில் உறுப்பினர்களாக சேர்க்கக்கூடிய சூழல் உருவாகி இருக்கிறது. இதனால்தான் முதலமைச்சர் ஆரம்பத்தில் இருந்து இந்த சட்டத்தை கடுமையாக எதிர்த்து வருகிறார்.

ஹாஜிகளுக்கு சிறப்பு நிதி இதுவரை ரூ.3 கோடியே 13 லட்சம் கொடுக்கப்பட்டுள்ளது. ரம்ஜானை முன்னிட்டு பள்ளிவாசல்களுக்கு இந்த ஆண்டு 8 ஆயிரம் டன் அரிசி வழங்க முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார். இதன் மூலம் அரசுக்கு ரூ.18 கோடியே 42 லட்சம் கூடுதல் செலவு ஏற்பட்டாலும், முஸ்லிம் மக்களின் மகிழ்ச்சிதான் முக்கியம். எப்போதும் முஸ்லிம் மக்களுக்காக தி.மு.க. அரசு உறுதுணையாக இருக்கும். நீங்களும் தி.மு.க. அரசுக்கு ஆதரவாக இருக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார். இந்த நிகழ்ச்சிக்கு அமைச்சர் சேகர்பாபு, தயாநிதி மாறன் எம்.பி, மாநில சிறுபான் மையினர் ஆணைய தலைவர் அருண், அரசு தலைமை ஹாஜி சலாஹூத்தீன் முகம்மது அய்யூப், தமிழ்நாடு ஹஜ் கமிட்டி தலைவர் அப்துல் சமத், அரசு தலைமை காஜி குலாம் மெஹதி கான், மாநில சிறுபான்மையினர் ஆணைய துணை தலைவர் இறையன்பன் குத்தூஸ், தமிழ்நாடு வக்பு வாரிய முதன்மை செயல் அலுவலர் தாரேஸ் அகமது உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## மாநிலங்களை ஒருங்கிணைத்து “கூட்டு நடவடிக்கைக் குழு” அமைக்கப்படும் என முதலமைச்சர் அறிவிப்பு!

சென்னை, 06 மார்ச் 2025: தொகுதி மறுசீரமைப்பு நடவடிக்கையினால் தமிழ்நாட்டிற்கு ஏற்படப்போகும் பேராபத்தைத் தடுத்து நிறுத்தும் நோக்கில் கழகத் தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் இன்று அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்றது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கூட்டப்பட்ட அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த இந்த அனைத்துக் கட்சிக் கூட்டமானது தலைமைச்செயலகத்தில் இன்று காலை 10 மணிக்குத் தொடங்கி மதியம் 2.30 வரைக்கும் நடைபெற்றது.

63 அரசியல் கட்சிகள் அழைக்கப்பட்டிருந்த நிலையில் 58 அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டது ஒரு வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வாகும். திமுக சார்பில் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, எம்.பி வில்சன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் பங்கேற்றவர்களிடம் தொகுதி மறுசீரமைப்பு நடவடிக்கையால் தமிழ்நாட்டிற்கு ஏற்படப்போகும் பேராபத்தை விளக்கமாக எடுத்துரைத்து, பவர்பாய்ண்ட் மூலம் தகவல்களை விளக்கி அனைத்துக் கட்சிகளின் ஒருமித்த ஆதரவைக் கோரினார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த கூட்டுணர்வை வெளிப்படுத்தும் வகையில் சிறிய கட்சிகள் - பெரிய கட்சிகள் என்ற பாகுபாடு இன்றி கலந்து கொண்ட அனைவரின் குரல்களும் தமிழ்நாட்டின் உரிமை காக்க ஒருமித்த கருத்தில் ஒன்றாக ஒலித்தன. கலந்து கொண்டவர்கள் ஆக்கப்பூர்வமான கருத்துகளைப் பகிர்ந்ததோடு தொகுதி மறுசீரமைப்பிற்கு எதிரான தீர்மானத்திற்கும் தங்களது ஆதரவையும் அளித்தார்கள்.

மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி மறு சீரமைப்பு செய்து, நாடாளுமன்ற அவைகளில் தமிழ்நாட்டின் பிரதிநிதித்துவத்தைப் பறிக்க திட்டமிட்டிருந்த பாஜகவின் சதிக்கு எதிராக, இந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் ஒட்டுமொத்த தமிழ்நாட்டின் எதிர்ப்பு குரலும் அழுத்தமாக பதிவு செய்யப்பட்டது. பாஜகவின் கூட்டணிக் கட்சிகளும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு தங்களது ஆதரவைத் தெரிவித்தனர்.

இக்கூட்டத்தில் முதலமைச்சர் அவர்கள் பின்வரும் தீர்மானங்களை முன்மொழிந்தார். அத்தீர்மானங்கள் அனைத்து கட்சிப் பிரதிநிதிகளால் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

தீர்மானம் - இந்திய நாட்டின் கூட்டாட்சி அமைப்பிற்கும், தமிழ்நாடு மற்றும் தென்னிந்திய மாநிலங்களின் அரசியல் பிரதிநிதித்துவ உரிமைக்கும் மிகப் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தக் கூடிய - மக்கள் தொகை அடிப்படையிலான “நாடாளுமன்றத் தொகுதி மறுசீரமைப்பை” இந்த அனைத்துக் கட்சிக் கூட்டம் ஒருமனதாகக் கடுமையாக எதிர்க்கிறது.

நாட்டின் நலனுக்காக மக்கள் தொகை கட்டுப்பாட்டை முனைப்பாகச் செயல்படுத்திய ஒரே காரணத்திற்காக, தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் குறைக்கப்படுவது முற்றிலும் நியாயமற்றது. இந்த வகையில், மக்கள் தொகை கட்டுப்பாட்டை அனைத்து மாநிலங்களும் முன்னெடுப்பதை ஊக்குவிக்கும் வகையில், 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையிலேயே நாடாளுமன்றத் தொகுதிகள் தொடர்ந்து வரையறுக்கப்படும் என்று கடந்த 2000-ஆம் ஆண்டில் அன்றைய பிரதமர் அவர்கள் உறுதி அளித்தவாறே, தற்போதும் இந்த வரையறை 2026-இல் இருந்து மேலும் 30 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்படும் என்று மாண்புமிகு பிரதமர் அவர்கள் நாடாளுமன்றத்தில் உறுதி அளிக்க வேண்டும். மேலும், அரசமைப்பு சட்டத்தில் அதற்குரிய சட்டத் திருத்தமும் நாடாளு மன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும்.

மேலும், நாடாளுமன்றத்தில் தற்போதைய உறுப்பினர்களின் எண்ணிக்கை உயர்த்தப்படும் பட்சத்தில், “1971-ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் தற்பொழுது நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் மாநிலங்களுக்கிடையே எந்த விகிதத்தில் தொகுதிகளின் எண்ணிக்கை உள்ளனவோ, அதே விகிதத்தில் தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களின் தொகுதிகளின் எண்ணிக்கையை உயர்த்துவதற்குத் தேவையான அரசியல் சட்டத்திருத்தத்தை மேற்கொள்ள வேண்டும் என ஒன்றிய அரசை இந்த அனைத்துக் கட்சிக் கூட்டம் வலியுறுத்துகிறது.

தொகுதி மறுசீரமைப்பின் காரணமாக, நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டின் தற்போதைய பிரதிநிதித்துவ சதவீதமான 7.18 என்பதை எக்காரணம் கொண்டும் ஒன்றிய அரசு மாற்றம் செய்யக் கூடாது என்று இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

தொகுதி மறுசீரமைப்புக்கு தமிழ்நாடு எதிரானதாக இல்லை என்றும், அதேசமயம் கடந்த ஐம்பதாண்டுகளாக சமூக, பொருளாதார நலத்திட்டங்களைச் சிறப்புற செயல்படுத்தியதற்கான தண்டனையாகத் தொகுதி மறுசீரமைப்பு அமைந்துவிடக் கூடாது எனவும் அனைத்துக் கட்சிக் கூட்டம் வலியுறுத்துகிறது.

இக்கோரிக்கைளைத் தமிழ்நாட்டின் குறைந்தபட்ச கோரிக்கைகளாக அனைத்துக் கட்சிக் கூட்டம் முன்வைக்கிறது.

இக்கோரிக்கைகளையும், அவை சார்ந்த போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லவும், மக்கள் மத்தியில் இப்பிரச்சினை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்திடவும், தமிழ்நாடு உள்ளிட்ட தென்மாநிலங்களில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய “கூட்டு நடவடிக்கைக் குழு” ஒன்றை அமைத்திடவும், அதற்கான முறையான அழைப்பை மேற்படி கட்சிகளுக்கு அனுப்பி வைக்கவும் இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

மக்கள் தொகை அடிப்படையிலான தொகுதி மறுசீரமைப்பு நடவடிக்கைக்கு எதிரான இந்த எதிர்ப்புக் குரல் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடையது மட்டுமல்ல; ஒட்டுமொத்த தமிழ்நாட்டின் உரிமைக்குரல் என்பது இன்று ஒன்றிய பாஜக அரசிற்கு உணர்த்தப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டின் உரிமைகளைப் பறித்து, தமிழர்களை இரண்டாந்தர குடிமக்களாக்கத் துடிக்கும் பாஜகவும் அதன் சில ஏஜண்டுகளும் இந்த கூட்டத்தை புறக்கணித்தார்கள். அவர்கள் என்றும் தமிழ்நாட்டின் பகைவர்கள்தான் என்பதை மீண்டும் நிரூபித்திருக்கிறார்கள்.

தமிழ்நாட்டின் உரிமைகளை காக்க வேண்டும் எனும் ஒற்றை நோக்கத்தோடு கட்சி, அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் தமிழ்நாட்டின் ஒற்றுமைக்குரல் ஒலிக்க வேண்டும் என்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நோக்கம் வெற்றியடைந்திருக்கிறது.

நாட்டின் கூட்டாட்சிக்கும், தமிழ்நாட்டின் உரிமைக்கும் தொகுதி மறுசீரமைப்பு என்ற பெயரால் ஏற்பட்டிருக்கும் பேராபத்தை எதிர்த்து நின்று இணைந்து போராடி வெற்றி பெற அனைவருக்கும் அழைப்பு விடுத்திருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

தென்னிந்திய மாநில முதலமைச்சர்களை ஒருங்கிணைத்து, தமிழ்நாடு உள்ளிட்ட தென்னிந்திய மாநிலங்களின் உரிமை பறிப்பிற்கு எதிரான போராட்டத்தை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமை தாங்கி நடத்த வேண்டும் என அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் கேட்டுக்கொண்டனர்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் ஒட்டுமொத்த தமிழ்நாடும் ஒன்றாய் இணைந்து எழுச்சியுடன் போராடும், இந்த உரிமைப் போராட்டத்தில் வெல்லும்!

ஒரே இலக்கு! தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும்!

கட்சி வேறுபாடுகளைக் களைந்து ஒரே குரலாக அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ட்விட்டர் தளத்தின் மூலமாக நன்றி தெரிவித்துள்ளார்.